**+2 வணிகவியல் 2ஆம் இடைப்பருவத் தேர்வு நவ -25**

1.(ஆ) வரவேண்டிய பங்காதாயம்
2.(ஈ) அனைத்தும்
3.(ஆ) சரக்குகள் மற்றும் சேவை வரி
4.(அ) உயர் நீதிமன்றத்தின் நீதிபதி
5.(ஆ) தனியார்மயமாக்கல்
6.(அ) 3 மாதங்கள்
7.(ஈ) மேற்கூறிய அனைத்தும்
8.(ஈ) தயாரிப்பு
9.(அ) i ii iii iv
10 (அ) A மற்றும் R சரியானது மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

**11. மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் யார்?** உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக சம்பந்தப்பட்ட மாநில அரசால் பதவி அமர்த்தப்பட்ட நபர் அந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படலாம். பொருளாதாரம், சட்டம், வணிகம் மற்றும் தொழில் நிர்வாகம் போன்ற துறைகளில் ஏற்படும் சிக்கல்களைக் கையாளும் திறமை கொண்டவர்களையும் நியமிக்கலாம்.

**12. VUCA –**விரைவான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வணிகத்தின் எதிர்கால சூழலை சுருக்கமாக ஏற்ற இறக்கம், நிச்சயமற்ற தன்மை சிக்கலான தன்மை மற்றும் தெளிவற்றத் தன்மை கொண்டவை என்று **VUCA** – ஐ கூறலாம்.

**13. உலகமயமாக்கலின் ஏதேனும் இரண்டு நன்மைகள்:** வெளிநாட்டு ஒத்துழைப்பை கூட்டுதல். சந்தை விரிவாக்கம். தொழில்நுட்ப வளர்ச்சி

**14. சரக்கு விற்பனை ஒப்பந்தம்:** எந்த ஒப்பந்தத்தின் வாயிலாகப் பொருளை விற்பவர் வாங்குபவர் விலை என்ற மறுபயன் பெற்றுக் கொண்டு பொருளின் மீதான உரிமையை மாற்றித் தருகிறாரோ அதுவே சரக்கு விற்பனை ஒப்பந்தமாகும்.

**15. தொழில்முனைவோரின் சிறப்பியல்புகள் 2 குறிப்பிடுக.** தொழில் துணிகர உணர்வு, தன்னம்பிக்கை

**16. வேளாண் தொழில் முனைவோர்:** வேளாண் பொருட்களை விளைவித்து நேரடியாகவோ அல்லது கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவும் சந்தையிடும் பணியை மேற்கொள்பவர் ஆவர்.

**17.** இந்தியாவில் குமரமங்கலம் பிர்லா குழு 2000, நாராணயமூர்த்தி குழு 2003, ஆதி கோத்ரேஜ் குழு 2008, தற்போது உதய் கோட்டக் குழு ஆகியவை பெருநிறுவன ஆளுமைக்கான விரிவான கட்டமைப்பை வழங்கியுள்ளன.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

**18. மாதிரியைப் பின்பற்றும் தொழில் முனைவோர்:** மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர்கள் தற்போது சந்தையில் கிடைக்கும் பொருள்களை தங்களின் அறிவு ஆற்றல், வல்லமையை வைத்துக் கொண்டு வேறு முறையில் வடிவமைப்பவர்கள். இவர்கள் மேலை நாடுகளில் வடிவமைக்கப்பட்ட பொருட்கள் தங்களின் உள்ளூர் தேவைக்கு ஏற்றபடி உருமாற்றி வெளியிடுபவர்கள்.

**19. அரசியல் சூழ்நிலை காரணிகள்:** சட்டம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று காரணிகளும் வணிகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதோடு வணிகத்ததை பாதிக்கவும் செய்கிறது.

**20. தாராளமயமாக்கல்:** என்பது வணிக நடைமுறைகளில் உள்ள சட்டதிட்டங்களை அல்லது வழிகளை பொருளாதாரத்தில், சந்தை நல்ல நிலையை அடைய அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆகும்.

**21. தற்போதைய / இருக்கின்ற சரக்கு:** ஒப்பந்தம் செய்யும் போது விற்பனையாளரின் கைவசம் உள்ள சரக்கு இருக்கின்ற சரக்கு ஆகும். விற்பனை செய்ய முகவரின் வசம் ஒப்படைக்கப்பட்ட சரக்கும், அடமானம் பெற்றவர் விற்கும் அடமான சொத்தும் உள்ளடங்கும்.

**22.**




| 23. தொழில் முனைவோர் | மேலாளர் |
|---|---|
| தொழிலை தொடங்குபவர் | தொழிலில் பணிபுரிபவர் |
| உரிமையாளர் | உழைப்பாளி |
| இலாபம் பெறுபவர் | ஊதியம் பெறுபவர் |

**24. ஏன் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் விடுமுறை அறிவிக்கப்படுகிறது?**

மாற்றுமுறை ஆவணங்களின் முதிர்வுநாள் பொது விடுமுறை நாளில் முடிவடைந்ததால், அந்த ஆவணங்களுக்கு அதற்கு முன் நாள் பணம் செலுத்தப்படும். திடீரென அரசு சில அசாதாரண சூழ்நிலைகளால் அதாவது தலைவர்களின் மரணம், இயற்கைச் சீற்றம், போன்ற நிகழ்வுகளை ஒட்டி அல்லது தேர்தலில் மக்கள் ஓட்டுபோட ஏதுவாக, விளையாட்டு போட்டிகள் துவக்க நாளை கொண்டாட மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் விடுமுறை அறிவிக்கின்றனர். சில சமயம் சிலர் நடத்தும் கடையடைப்பு போராட்டங்களினால் வன்முறை எழலாம் என அரசு கருதும் நேரத்தில் கூட இச்சட்டத்தின் கீழ் விடுமுறை அறிவிக்க வகை செய்யப்படுகிறது. இதனால் அன்றறைய தினம் முதிர்வடையும் மாற்றுமுறை ஆவணங்களுக்ககான பணம் அடுத்த நாளில் செலுத்தப்படும்

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

**25.அ. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.**

**நிதிப்பிரச்சனை:-** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**ஆதரவு இன்மை:-** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள் அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**கடும் போட்டி:-** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**கல்வியறிவு இன்மை:-** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**சார்ந்து வாழும் கலாச்சாரம்:-** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

**25.ஆ. LPG- யின் சிறப்பு அம்சங்கள்:**

புதிய வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களை அறிமுகம் செய்வது.

வணிகக் கட்டுப்பாடுகளை அகற்றுதல்.

பல்வேறு பொருள்களுக்கு புதிய சந்தை வாய்ப்பை உருவாக்கியது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை உருவாக்குகிறது.

நுகர்வோர் பொருட்களின் சந்தையை பெருக்கிட உதவியது.

**26.அ.**

| அடிப்படை | நிபந்தனை | நம்புறுதி |
|---|---|---|
| பொருள் | இது ஒப்பந்தத்தின் கருப்பொருளாகும் | இது ஒப்பந்தத்தின் துணையாகும். |
| முக்கியத் துவம் | ஒப்பந்தத்தில் நிபந்தனையை மீறுவது ஒப்பந்தத்தையே மீறுவதாகக் கருதப்படும். | நம்புறுதியை மீறுவது ஒப்பந்தத்தின் மீறுவது ஆகாது. |
| உரிமை மாற்றம் | நிபந்தனை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழ முடியாது. | நம்புறுதியை நிறைவேற்றாமல் உரிமை மாற்றம் நிகழலாம். |
| தீர்வு | நிபந்தனையை மீறினால் ஒப்பநதத்தால் பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்தத்தை நீக்கிக் கொள்வதுடன் நட்டஈடு கோரும் உரிமையைப் பெறுகிறார். | நம்புறுதியை மீறுவதனால் ஒப்பந்தத்தில் பாதிக்கப்பட்டவர் நட்ட ஈடு கேட்கும் உரிமையை மட்டுமே பெற்றுள்ளார். |

**26.ஆ.**

| அடிப்படை | மாற்றுச்சீட்டு | காசோலை |
|---|---|---|
| வரையப்படுவது | குறிப்பிட்ட நபர் மீது எழுதப்படும். | வங்கியர் மீது மட்டும் எழுதப்படும். |
| சலுகை நாள் | சலுகை நாட்கள் - மூன்று | சலுகை நாட்கள் இல்லை. |
| படிகள் | அந்நிய மாற்றுச்சீட்டு மூன்று படிகளில் தயாரிக்கப்படுகிறது. | எதுவும் இல்லை. |
| கீறல் | மாற்றுச்சீட்டை கீறலிட முடியாது. | காசோலையை கீறலிட முடியும். |
| வருவாய் தலை | வருவாய் தலை ஒட்ட வேண்டும். | வருவாய் தலை ஒட்ட வேண்டியதில்லை. |